1st April 1965]

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார்: மேலும் புலனாய்வு நடத்துவதற்காக இது இப்போது போலீசாரிடம் முடிவுரு நிலையில் உள்ளது.

Jaggery manufacturing co-operative societies

* 413 Q.—Sri M. V. Karivengadam : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of jaggery manufacturing co-operative societies established so far in the State and the number of tappers employed therein?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார்: (1) இதுவரை நம் மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ள பனைவெல்ல உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1,482.

(2) இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளரின் எண்ணிக்கை 1,90,441 ஆகும்.

திரு. கோ. சி. மணி: மது விலக்குச் சட்டத்தின் காரணமாக வேலையை இழந்தவர்களில் எத்தனைபேர் இதன் மூலம் வேலை வாய்ப்புப் பெற்று இருக்கிறார்கள்?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார்: நான் சொன்ன மொத்த எண்ணிக்கையில் அவர்களும் சேர்ந்திருக்கிறார்கள்.

Chettipatti Labour Contract Co-operative Society, Dharmapuri

* 414 Q.—Sri M. V. Karivengadam : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) the date of formation of the Chettipatti Labour Contract Co-operative Society in Dharmapuri division;

(b) the nature of financial assistance so far extended; and

(c) its present financial position?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார்: (அ) செட்டிப்பட்டி, "ஆர். வி. ஹரிஜன கூட்டுறவு தொழிலாளர் ஒப்பந்தச் சங்கம் லிமிடெட்", 1-9-1960-ல் பதிவு செய்யப்பட்டு, 5-9-1960-லிருந்து தன்பணியை ஆற்றத் தொடங்கியது.

(இ) இதன் தொழில் மூலதனத்திற்காக அரசாங்கம் ரூ. 50,000 வட்டியில்லாக் கடனுக வழங்க அனுமதித்துள்ளது. இதில் ரூ. 45,000 சங்கத்திற்கு வழங்கப்பட்டுவிட்டது. இந்தக் கடன் வாங்கியதிலிருந்து ஆருவது ஆண்டு முதல் 20 சம ஆண்டுத் தவணைகளில் இக்கடன் திருப்பிச் செலுத்தப்படும்.

(உ) 30-6-1964 வரை இச்சங்கம் ரூ. 16,056.18 நஷ்டத்தில் பணியாற்றிவந்தது.

நொய்யல் ஆற்றின் உற்பத்தி இடத்தில் அணை

*** 415 கேள்வி.—திரு. எம். எஸ். மணி:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவையில் நொய்யல் நதி உற்பத்தியாகும் பகுதியில் அணை கட்டும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும்?

கனம் திரு வெ. ராமையா : (அ) தற்போதைக்கில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

10-00 a.m. **கோவை நகரில் தண்ணீர் பற்றுக்குறையைப் போக்குவதற்கான நடவடிக்கைகள்**

*416 **கேள்வி.— திரு. எம். எஸ். மணி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை நகர குடி தண்ணீர் பற்றுக்குறையைப் போக்க ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) & (இ) இக்கேள்விக்குரிய **பதில்** * சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

UNSTARRED QUESTIONS.

குளச்சலில் மருத்துவ மனை கட்டிடம்

62 **கேள்வி.—திரு. ஏ. சுவாமிதாஸ் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கன்யாகுமரி மாவட்டத்தில் குளச்சலில் கட்ட இருக்கும் மருத்துவ நிலையத்தின கட்டிட வேலை தற்போது எந்நிலையிலுள்ளது ?

(இ) இம்மாவட்டத்திலுள்ள நாகர்கோவில் அரசாங்க ஆஸ்பத்திரியை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறதா ?

பதில்.—(அ) குளச்சலில் உள்ள அரசாங்க மருந்தகத்தை தாலூகா தலைமையிட மருத்துவ மனையாக உயர்த்துவதற்காக கட்டிடங்கள் கட்டும் திட்டத்திற்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை.

(இ) இல்லை.

(*a*) The scheme for the construction of buildings for converting the Government Dispensary, Colachel, into a taluk headquarters hospital has not yet been sanctioned.

(*b*) No.

குடியிருப்பு மனைகளுக்கு மனுக்கள்

63 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1962-63, 1963-64, 1964-65 ஆண்டுகளில் குடியிருப்பு மனைகள் கோரி எத்தனை மனுக்கள் வந்துள்ளன ?

(இ) அவைகளுள் பைசல் செய்யப்பட்டு மனைகள் வழங்கப்பட்ட மனுக்கள் எத்தனை ?

(உ) பைசலாகாமல் உள்ள மனுக்கள் எத்தனை ?

பதில்.—

	1962–63.	1963–64.	1964–65.
(அ)	555	534	377
(இ)	177	169	78
(உ)	378	365	299

* 813-ம் பக்கத்தில் II-வது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.